**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**S.T.C.No.188/2023**

Examined as : Dw1

| | | | |
|---|---|---|---|
| Name | : கருணாநிதி | Defence | : |
| Father Name | : மாரிமுத்து | Court | : |
| Village | : காரம்பள்ளம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 56/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 19.05.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

இந்த வழக்கின் புகார்தாரர் அன்வர்நிஷாவை எனக்கு தெரியும். எதிரி முகம்மது ரபீக் எனது பக்கத்து ஊரைச்சேர்ந்தவர் ஆவார். அன்வர்நிஷாவிடம் முகம்மது ரபீக் அவரது இடத்தை விற்பனை செய்வதாக சொன்ன விபரம் எனக்கு தெரியாது. அன்வர்நிஷாவின் குழந்தைகளும் எனது குழந்தைகளும் ஒரே பள்ளியில் படித்து வருகிறார்கள். அதனால் எனக்கு அன்வர்நிஷா தெரிந்தவர் ஆவார். ஒருநாள் அன்வர்நிஷா என்னிடம் ஒரு இடம் வாங்குவதாகவும் அது சம்மந்தமாக ஏதாவது பிரச்சனை வந்தால் நான் தலையிட்டு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனக்கூறினார். நானும் சரி என ஒப்புக்கொண்டேன். அவர் என்னிடம் பச்சை தாளில் கையெழுத்து வாங்கினார். நான் கையெழுத்துபோடும் போது என்னுடன் அன்வர்நிஷாவை தவிர வேறு யாரும் இல்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் காரம்பள்ளம் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரி முகம்மது ரபீக் திருக்களாச்சேரியில் வசித்து வருகிறார். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் முன்பு பெட்டிக்கடை வைத்திருந்தார் தற்போது என்ன செய்கிறார் என்று எனக்கு தெரியாது. என்னை சாட்சியம் அளிப்பதற்கு எதிரி அழைத்து வந்தாரா என்றால் இல்லை.

2. சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிப்பதற்கு எதிரியின் வழக்கறிஞர் என்னை அழைத்ததன் பேரில் வந்தேன். எனது பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருக்களாச்சேரி கிளையின் மேலாளரை அடித்ததாக வழக்கு இந்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

3. எனது சார்பாக மேற்படி வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் தான் இந்த வழக்கிலும் எதிரியின் வழக்கறிஞர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் மசாஆ 6 ஆன ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் மசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கையெழுத்து போடும்போது அதில் வேறு யாருடைய கையொப்பமும் இல்லை. அதில் எழுதிக்கொடுப்பவர் மற்றும் வாங்குபவரின் கையொப்பங்கள் யாருடையது என்று தெரியுமா என்றால் தெரியாது.

5. அந்த ஆவணத்தில் உள்ள புகைப்படம் எதிரியுடையது தான். எதிரிக்கு திருக்களாச்சேரியில் வீடு மற்றும் மனை உள்ளது என்றால் சரிதான். எதிரி அவரது வீடு மற்றும் மனையை புகார்தாரருக்கு விற்பதாக கூறி பகுதி பாத்திய அனுபவ உரிமை மாற்று ஒப்பந்தத்தை ரூ.9 லட்சத்தை பெற்றுக்கொண்டு மசாஆ 6 ஆன ஆவணத்தை எழுதிக் கொடுத்துளார் என்றாலும் அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றாலும் அந்த விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் தற்போது எதிரியிடம் தொகை வாங்கி கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எதிரியின் மனைவி மீதும் அன்வர்நிஷா காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை இல்லை.